ந.க.எண். 1795/கைப1/2025
நாள்.20.05.2025

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
இயக்குநரகம்,
கிண்டி, சென்னை–32

குறிப்பாணை

பொருள்: பயிற்சி –2025–ஆம் ஆண்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை மேற்கொள்ளுதல் – சேர்க்கை கால அட்டவணை அனுப்புதல் – தொடர்பாக

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் / அரசு உதவி பெறும்/ சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இணையதளம் வாயிலாக 2025–ம் ஆண்டிற்கான சேர்க்கைக்கான உத்தேச கால அட்டவணை கீழ்காணுமாறு தெரிவித்து கொள்ளப்படுகிறது.

| வ. எண். | நிகழ்வு | நாள் |
|---|---|---|
| 1. | விண்ணப்பங்கள் பதிவு செய்ய துவங்கும் நாள் | 19.05.2025 |
| 2. | விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 13.06.2025 |
| 3. | விண்ணப்பங்கள் சான்றிதழ்களுடன் சரிபார்த்து ஒப்புதல் வழங்க Nodal ITI –க்கு கடைசி நாள். | 15.06.2025 |
| 4. | மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசை பட்டியல் வெளியீடு | 16.06.2025 |
| **முன்னுரிமை கோரும் விண்ணப்பதாரர்கள்** | | |
| 5. | விண்ணப்பத்தின் போது முன்னுரிமை விருப்பங்களுக்கேற்ப தெரிவு செய்த தொழிற்பயிற்சி நிலையங்களின் அடிப்படையில் தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ள விவரங்களை தெரிவித்து விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவல் அனுப்புதல் | 16.06.2025 |
| 6. | தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையினை உறுதி செய்து சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் சென்று கட்டணம் செலுத்தி சேர்க்கையினை உறுதி செய்தல். | 17.06.2025 முதல் 19.06.2025 |
| 7. | முன்னுரிமை விண்ணப்பதாரர்கள் சேர்க்கையினை உறுதி செய்த பின் காலியிடங்களை அறிவித்தல். | 19.06.2025 |

| பொதுப்பிரிவு | | |
|---|---|---|
| 8. | மாணவர்கள் விண்ணப்பத்தின் போது விருப்பங்களுக்கேற்ப தெரிவு செய்த தொழிற்பயிற்சி நிலையங்களின் அடிப்படையில் தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ள விவரங்களை தெரிவித்து விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவல் அனுப்புதல் | 20.06.2025 |
| 9. | தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையினை உறுதி செய்து சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் சென்று கட்டணம் செலுத்தி சேர்க்கையினை உறுதிசெய்தல். | 20.06.2025 முதல் 27.06.2025 |
| 10. | விண்ணப்பதாரர்கள் சேர்க்கையினை உறுதி செய்த பின் காலியிடங்களை அறிவித்தல் | 28.06.2025 |

இந்த கால அட்டவணையின் படி தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை மேற்கொள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/-
இயக்குநர்

பெறுநர்

1. துணை இயக்குநர் / முதல்வர் ,
   அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்.
2. மண்டல இணை இயக்குநர் (பயிற்சிப்பிரிவு)
   சென்னை / கோயம்புத்தூர் / மதுரை / திருச்சி / திருநெல்வேலி / சேலம் / விழுப்புரம் – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்

//ஆணைப்படி அனுப்பபடுகிறது//

20/5/25

துணை இயக்குநர் (சேர்க்கை)

20/5/25